# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.29/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா. 3 |
| Name | : | அம்சா |
| Father's Name | : | . |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the 18.07.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரி எங்கள் பங்காளி உறவுமுறை ஆவார். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு 2017ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. ஒருநாள் மாலை 5.00 மணிக்கு அ.சா.1ம், அ.சா.2ம் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து படுத்திருந்தார்கள். 5.00 மணி அளவில்

அ.சா.1 கழனிக்கு சென்றார். குளிக்கச்சென்ற மகன் நீண்ட நேரமாக காணவில்லை என்பதால் நான் அ.சா.2யை கழனிக்கு அனுப்பினேன். பின்னால் நானும் சென்றேன் அங்கு எனது கணவர் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்தார். எனது மகனும் ரத்தம் வழிந்துக்கொண்டு மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்தார். நான் அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் சென்று தண்ணீர் வாங்கி தெளித்தேன். பின்பு ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். வந்தவாசி அரசு மருத்துவமனையில் முடியாது என்று சொன்னதால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

அ.சா.1 எனது மகன். அ.சா.2 எனது கணவர் என்றால் சரிதான். எதிரிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் நிலம் தொடர்பாக முன்விரோதம் என்றால் ஆமாம். நான் சொத்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரி என்னை அடிக்கவில்லை. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காலையில் என் மகன் கூலிவேலைக்கு சென்றுவிட்டு வந்தான். என் மகன் மத்தியம் 3.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டு 5.00 மணிக்கு கழனிக்கு சென்றான். சம்பவம் குறித்து எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நானாக தான் சென்றேன். அ.சா.1, அ.சா.2 யை நான் தான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். என் மகனுக்கு மூக்கிலும் உதட்டிலும் ரத்தம் வந்தது. சம்பவ மயத்தில் யாரும் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி எனது மகனையும் கணவரையும் அடிக்கவில்லை என்றாலும் எனது கணவர்தான் மது போதையில் சென்று எதிரியிடம் தகராறு செய்து தடுமாறி கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல. எனது மகன் சம்பவ இடத்தில் இல்லையென்றாலும் எனது கணவர் தகவல் சொல்லிதான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகன் கொடுத்த புகாருக்கு ஆதராவாக நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**